# In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.

EA.No. 4/2024 In Ep.No.2/2020 In OS.No.27/2015

தேதி- 20.08.2025

(R.W.1) - சுசிலா

மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

1. அசல் வழக்கு எண்.27/2015 வழக்கில் இம்மனுவின் மனுதாரான ஜெனிகுமாரியை கட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேற்சொன்ன வழக்கு ஜீவணாம்சம் கேட்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரிதான். நிறைவேற்று மனு எண்.2/202020 எதிர்மனுதாரான ராஜமணிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட நிறைவேற்றுமனு என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.27/2015 வழக்கு இறுதி தீர்ப்பானை பிறப்பிக்கபடாமல் மாண்புமிகு மெட்ராஸ் உயர் நீதிமன்றம் மதுரை கிளையில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நிறைவேற்று மனுவான 2/2020-ல் ஜெனிகுமாரியை கட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நிறைவேற்று மனு தாக்கல் செய்த போது ராஜமணிக்கு மனு சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. மனு பட்டிகை சொத்தை ஜெயகுமாரி 2015-ல் கிரையம் பெற்றுவிட்டார் என்றாலும் நான் இந்த நிறைவேற்று மனுவை 2020-ல் தான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். 2015-ல் ஏற்படுத்தப்பட்ட ஆவணம் ஒரு பொய்யான ஆவணம் என்றால் சரிதான். ஜெயகுமாரி மீது அசல் வழக்கு எண்.151/2016 என்ற வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

2. மேற்சொன்ன வழக்கில் ஜெனிகுமாரி கிரையம் பெற்ற சொத்துடன் சேர்ந்துள்ள இம்மனுபட்டிகை சொத்தையும் கொண்ட விலை ஆவணத்தை ரத்து செய்ய கோரி பரிகாரம் கேட்டு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். மேற்சொன்ன வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் அதுபற்றி தெரியாது. மேற்சொன்ன வழக்கின் மீது மேல்முறையீடு ஏதும் செய்யப்படவில்லை என்றால் அதுபற்றி தெரியாது. அசல் வழக்கு எண்.151/2016-ல் 1வ-து பட்டிகை சொத்தான 4 சென்ட் சொத்தை தான் இந்தமனுவில் மனு சொத்தாக சொல்லியுள்ளேன் என்றால் நினைவில்லை. அசல் வழக்கு எண்.151/2016-ல் ஜெயகுமாரி இம்மனு சொத்துடன் கிரையம் பெற்ற மற்ற சொத்துகள் கொண்ட கிரைய ஆவணம் செல்லத்தக்கது என்று தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கின் மனுதாரர் கிரையம் பெற்ற சொத்து சட்டப்படியும் நீதிமன்ற தீர்ப்பின் படியும் கிடைத்த சொத்து என்றாலும் அதை பொருத்து நான் எந்த பரிகாரமும் கோர

முடியாது என்றால் சரியல்ல.  நான் இம்நிறைவேற்று மனு தாக்கல் செய்வதற்கு முன்பே கிரையம் செய்து கொடுத்துவிடப்பட்டதால் மேற்சொன்ன சொத்தின் மீது எந்த உரிமையும் கோரமுடியாது என்றால் சரியல்ல.

3. எதிர்மனுதாரர் ராஜமணி என்பவர் வீடு கட்டுவதற்கும் அவரின் அப்பாவிற்கு வைத்திய செலவிற்காகவும் பணம் பெற்றுககொண்டு இம்மனு பட்டிகை சொத்தை கிரையம் கொடுத்தார் என்றாலும் தற்போது நானும், ராஜமணியும் சேர்ந்து மனு சொத்தை அபகரிக்கவேண்டி நிறைவேற்று மனு தாக்கல் செய்துள்ளோம் என்றால்சரியல்ல. ஜீவணாம்சம் ராஜமணியிடம் இருந்து பெறவேண்டும் என்றால் ராஜமணி சொத்தில் இருந்து தான் ஜீவணாம்சம் கோர முடியும் என்றாலும் இம்மனு பட்டிகை சொத்தின் மீது எந்த உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல. என் முதல் விசாரனையில்  ஈட்டுறுதி மற்றும் பிணைப்பத்திரம் எழுதிக்கொடுத்து கிரையம் கொடுத்த சொத்தை ஜெனிகுமாரியிடம் இருந்து பெறவேண்டும் என்று சொல்வது மனுவிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்சொன்ன சங்கதிகளை மறைத்து ஜெனிகுமாரியை கட்சி சேர்க்காமல் நிறைவேற்று மனு தாக்கல் செய்துள்ளதால் நான் தாக்கல் செய்துள்ள நிறைவேற்று மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. எதிர்க்கோரிக்கை மனு அனுமதிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.